# ***IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI***

***OS.No.48/2020*** ***Date: 21.07.2026***

***DW1 –*** ரவீந்தர்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

நான் ஆறு மாதம் தாமதமாக தான் பதிலறிவிப்பு அனுப்பினேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கு இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால், சரியல்ல. அந்த ஆவணங்களில் வாதி தரப்பினர் இல்லை என்றால், சரியல்ல. அதில் வாதி கையொப்பம் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தின் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். சிதம்பரத்திடம் வாங்கிய கடனுக்கு ஆதரவாக வா.சா.ஆ.1 எழுதப்பட்டதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. வாதிக்கும் சிதம்பரத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால், சரியல்ல. வாதியை ஏமாற்றுவதற்காக தான் கடனுக்கு ஆதரவாக வா.சா.ஆ.1 எழுதப்பட்டது என்று பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரம் தான் என்றால், சரியல்ல. 2002 ல் சங்ககிரி கூட்டுறவு வங்கியில் நானும், என் அப்பாவும், சகோதரர்களும் சேர்ந்து அடமான கடன் வாங்கியுள்ளோம் என்றால், சரிதான். சிதம்பரத்திடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டதால் வா.சா.ஆ.1 ரத்து செய்யப்படவேண்டும் என்று நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. சிதம்பரம் வாதியை கருவியாக பயன்படுத்தி வா.சா.ஆ.1 ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்காமல் வாதியை ஏமாற்றுவதற்காக பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்த படி தாவா சொத்தை வாதிக்கு கிரையம் செய்துக்கொடுக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- ரவீந்தர்

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.